**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 36/2017 மற்றும் 13/2022<br>கூட்டு விசாரணை வழக்கு | வா.சா. | : 2 |
| பெயர் | : கந்தசாமி | த/பெ. | : பழனிச்சாமி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : தேரடிதெரு |
| தேதி | : 20.11.2023 | வயது | : 69 /2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 1.02 P.M. – 1.09 P.M.

**<u>அசல் வழக்கு 36/2017 ன் வாதிகள் மற்றும் 13/2022 வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 2 வது வாதியாவேன். எங்களுக்கு எதிராக பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ. 21 – 09.06.1994 தேதியிட்ட நத்தம் வட்டாட்சியர் அவர்களால் டி.ஆர்.6/94 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – உண்மை நகல்.

வா.சா.ஆ. 22 – 09.06.1994 தேதியிட்ட நத்தம் வட்டாட்சியர் அவர்களால் டி.ஆர்.3/94 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – உண்மை நகல்.

மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ–21 மற்றும் 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட எனது சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்றுக்கொண்டு அ.வ.எண். 36/2017 வழக்கை வாதிகள் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டியும், அ.வஎண்.13/2022 வழக்கை தள்ளுபடி செய்யவேண்டியும் கேட்டுக்கொள்கிறேன்.

**பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 20.11.2023 கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYA SURIYA
Digitally signed by V UDAYA SURIYA
Date: 2023.11.20 09:59:21 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.